செ.வெ. எண்: 484 நாள்: 15–08–2012

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்
சத்தியவாணி முத்து நகர் திட்டப்பகுதி

**மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் 15.08.2012 அன்று நேரில் ஸ்தல ஆய்வு பற்றிய செய்திக் குறிப்பு**

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், மாநகராட்சி கோட்டம் எண்.74, ஓட்டேரி சத்தியவாணி முத்து நகர் திட்டப்பகுதியில் 1971 முதல் 1980 வரை 848 அடுக்குமாடிக் குடியிருப்புகள்(G+3) கட்டப்பட்டு வாரியத்தின் பராமரிப்பில் உள்ளது. இக்குடியிருப்புகளை பழுது பார்பதற்காக ரூ.42.12 இலட்சங்கள் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு பழுது பார்ப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் கூடுதலாக திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.25.00 இலட்சம் ஒதுக்கப்பட்டு பழுது பார்க்கும் பணிகள் துவங்கும் நிலையிலுள்ளன.

இத்திட்டப்பகுதியில் மொத்தமுள்ள 22 பிளாக்குகளில் 8 பிளாக்குகளில், மேற்கூரை பூசுதல், பழுதடைந்த மாடிப்படி படிக்கட்டுகளை இடித்துவிட்டு புதியதாக கட்டுதல், மாடம் இடித்துவிட்டு புதியதாக கட்டுதல், பழுதடைந்த கழிவறைகளை சீர் செய்தல் மற்றும் வெளிப்புற சுவர்களை பூசுதல் போன்ற பழுது பார்ப்புப் பணிகள் இக்குடியிருப்புகளில் உள்ள குடியிருப்புதாரர்களின் ஒத்துழைப்போடு நடைபெற்று பணிகள் முடிவடையும் நிலையிலுள்ளது. அதில் குறிப்பாக “N” பிளாக்கில் வசிப்பவர்கள் ஒத்துழைப்பு தர மறுத்துவிட்டதால் பழுதடைந்த மாடிப்படி படிக்கட்டுகளை இடித்துவிட்டு புதியதாக கட்டுதல் மற்றும் மாடம் இடித்துவிட்டு புதியதாக கட்டுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள இயலவில்லை. 14.08.2012 அன்று காலை சுமார் 9.00 மணியளவில் “N” பிளாக்கில் உள்ள ஒரு மேல் பால்கனி உடைந்து அதனால் நான்கு நபர்களுக்கு காயம் ஏற்பட்டு கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

த.பி.பா.,

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.ஆர்.வைத்தியலிங்கம் அவர்களும், சென்னை மாநகர மேயர் திரு.சைதை துரைசாமி அவர்களும், திரு.வி.க. சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.நீலகண்டன் அவர்களும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை செயலாளர் மற்றும் குடிசை மாற்று வாரிய தலைவர் அவர்களும், குடிசை மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் மற்றும் உயர் அதிகாரிகளுடன் 15.08.2012 அன்று இத்திட்டப்பகுதியை நேரில் ஆய்வு செய்தனர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திட்டப்பகுதியை தூய்மையாக வைத்துக் கொள்ளவும், பராமரிப்புப் பணிகளை துரிதமாக முடிக்கவும் அதிகாரிகளை அறிவுறுத்தியும் மற்றும் இப்பகுதியில் உள்ள குடியிருப்புதாரர்களை பழுது பார்ப்புப் பணிகளை நிறைவேற்ற முழு ஒத்துழைப்பு அளிக்கும்படியும் அறிவுறுத்தினார்கள். மேலும் 35 ஆண்டுகளுக்கு முன்பாக கட்டப்பட்டுள்ளதால் இக்குடியிருப்புகளை இடித்து விட்டு புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கு பரிசீலனை செய்யுமாறு அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்கள்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**